**கவனிக்க.-** *2023.10.06 ஆந் திகதிய 2353 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2354- 2023 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2023.10.13

*2354 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 276 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) ஒதுக்கீடு சட்டமூலம் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நிதி சட்டமூலம் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு 8,
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## ஜீவிதய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

விமலவீர திஸாநாயக்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஜீவிதய மன்றம்" எனப்படும் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

1. பெண்கள் மற்றும் சிறுவர்களின் சகல உரிமைகளையும் பாதுகாத்தல்;
2. மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் கலை அம்சங்களுக்கு ஆதரவளித்தல்;
3. மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவுதலும் ஆதரவளித்தலும்.

விமலவீர திஸாநாயக்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

07- 147

---

## உடுநுவர அபிவிருத்தி நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

வேலுகுமார் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "உடுநுவர அபிவிருத்தி நிதியம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிதியத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) பாடவிதான, இணைய பாடவிதான மற்றும் துணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் உச்ச பயனை அடைந்து கொள்ளும் விதத்தில் பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கல்;

(ஆ) கல்வி, பயிற்சிகளை வழங்குதல் மற்றும் விசேட திட்டங்களை செயற்படுத்தலினூடாக மக்களின் பொருளாதாரம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளுக்கான பங்களிப்பினை வழங்குதல்;

(இ) இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் உடுநுவர அபிவிருத்தி நிதியத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் சகல இனத்தவர்களும் கலந்து பயன்பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படல்,

போன்றவை.

வேலுகுமார்,
பாராளுமன்ற உறுப்பினர்.

10- 148

## துளிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குலசிங்கம் திலீபன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "துளிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிதியத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:

(அ) நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்;

(ஆ) மக்களின் ஒழுக்க மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளல்;

(இ) சமய சார்பான நிலையங்களின் அபிவிருத்திக்கு உதவி வழங்கல்.

குலசிங்கம் திலீபன்,
பாராளுமன்ற உறுப்பினர்.

10- 149

---

## முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல்

## கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட XII ஆம் பாகத்தின் பிரகாரம் நீதிமன்றினால் கணக்கை முடித்து மூடி விடுவதற்கான விடயம் தொடர்பானது.

இரத்மலானை, அத்திடிய, கட்டுகுறுந்துவத்த வீதி, 1-1/ 1, என்ற இலக்கத்தில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதும் பிவி 64201 என்ற பதிவிலக்கத்தையுடையதும் முன்பு ஹரோட்ஸ் இண்டர்நஷனல் (பிரைவட்) லிமிட்டட் என்பதும் சூம் இண்டர்நஷனல் (பிரைவட்) லிமிட்டட்.

வழக்கு இல. : CHC/ 66/ 2023/ CO
தன்மை: கம்பனி நடைமுறை, சுருக்கம்

சார்ல்ஸ் ரோஹான் ரவீந்திர டி அல்விஸ் ,
இல. 148/5, 5 ஆம் ஒழுங்கை,
அன்டர்சனி வீதி,
தெஹிவளை,

மனுதாரர்

கொழும்பில் அமைந்துள்ள மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனமான இரத்மலானை, அத்திடிய, கட்டுகுறுந்துவத்த வீதி, 1-1/1, என்ற இலக்கத்தில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதும் பிவி 64201 என்ற பதிவிலக்கத்தையுடையதும் முன்பு ஹரோட்ஸ் இண்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் என்பதும் சூம் இண்டர்நஷனல் (பிரைவட்) லிமிட்டட்.

மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமைந்துள்ளது) மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனமான இரத்மலானை, அத்திடிய, கட்டுகுறுந்துவத்த வீதி, 1-1/ 1, என்ற இலக்கத்தில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதும் முன்பு பிவி 64201 என்ற பதிவிலக்கத்தையுடையதும் கணக்குகளை முடித்து விடுவதற்கான மனுவொன்றை மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரினால் 2023, ஒகத்து 25ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த மனுவானது, 2023, திசெம்பர் 14 ஆந் திகதியன்று விசாரணைக்கு எடுபட கட்டளை இடப்பட்டதாகவும் அம்மனு தொடர்பான கட்டளையொன்றை வழங்குவதற்கு சாதகமாக

*அல்லது எதிராக கூற்றுக்களை எடுத்துரைக்க எதிர்பார்க்கும் குறித்த நிறுவனத்தின் பற்றாளர் அல்லது பங்களிப்பாளர் இருப்பின், அது குறித்த பிரத்தியேகமாக அல்லது தங்கள் சட்ட ஆலோசகர் அல்லது சட்டத்தரணி மூலமாக குறித்த விசாரணை நடத்தும் போது ஆஜராக முடியும் என்றும் குறித்த மனுவின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக உரிய கட்டணங்களை பெற்றக் கொண்ட பின்னர், அதன் பிரதி தேவைப்படும் குறித்த நிறுவனத்தின் பற்றாளர் அல்லது பங்களிப்பாளரருக்கு கீழ் கையொப்பமிடுபவரினால் வழங்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கையொப்பமிட்டவர் :* *டயனி சி. மிலவித்தனச்சி,*
*சட்டத்தரணி*
இல. *492*/D/S, லேக் வீதி, அவெரிஹேன, ஹோக்கந்தர.

***குறிப்பு*:** *குறித்த மனுவை விசாரணை செய்யும் போது ஆஜராக எதிர்பார்க்கும் எவரேனும் இருப்பின், அவ்வாறு செய்வதற்கு தான் திட்டமிட்டு இருப்பதாக எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று மேற்படி பெயரிடப்பட்ட சட்டத்தரணியாகிய டயனி சி.மிலவித்தனச்சிடம் கொண்டுவந்து கையளித்தல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த அறிவித்தலில் குறித்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது வர்த்தக நிறுவனமென்றால், அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி போன்றவற்றைக் குறித்து, குறித்த நபரால் அல்லது அவ்வர்த்தக நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களது பதிவு பெற்ற சட்டத்தரணி இருப்பின் அவரால் கையொப்பமிட்டு மேற்படி நபருக்கு 2023, திசெம்பர் 13 ஆந் திகதியன்று மாலை 4 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு கொண்டுவந்து கையளிக்கப்படல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்பப்படுமானால் போதுமான கால அவகாசத்தில் அனுப்பப்படல் வேண்டும்.*

*மனுதாரருக்கான சட்டத்தரணி.*

*10– 167*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*